# லஞ்சப் புகார் பற்றி ஆட்சி மன்றத்தில்

Registered as a Newspaper in Ceylon

★★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10 இதழ் 211

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

[illegible] கீலக ஆவணி 24 ஜு. ஆகிர் 15 திங்கட்கிழமை (9-9-68)

## நல்லூர் எம். பி.

கொழும்பு, ஞாயிறு தமிழரசுக்கட்சி எம். பிக்கள் மீது சிலர் லஞ்ச ஊழல் குற்றம் இருப்பதாக அவதூறான பிரசாரம் செய்து வருகின்றனர். வேண்டுமென்றே, அரசியல் நோக்கத்துடன் செய்யப்பட்டு வரும் இப்பிரசாரத்துக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் "என்று நல்லூர் எம் பியும் தமிழரசுக்கட்சித் தலைருமான டாக்டர் இ. மு. வி நாகநாதன் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் விடுத்த அறிக்கையில் கேட்டுக் கொண்டார்.

எதிர்க்கட்சி அங்கத்தவர் சிலர் மீதும் இதுபற்றிக் குற்றம் சுமத்திய டாக்டர் நாகநாதன் ஏன் இந்த அநாவசியமான பிரசாரம் என்று கேட்டார்.

"லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு பற்றி செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் மீது நீங்கள் வழக்குத் தொடரலாமே" என்று சபாநாயகர் திரு ஷேர்லி கொரியா குறுக்கிட்டுக் கேட்டபோது, "பத்திரிகைகளில் பொதுவான குற்றச்சாட்டுக்களே பற்றி செய்தி

[8-ம் பக்கம் பார்க்க]

# 'இந்துக்களின் விஷயத்தில் தலையிட வேண்டாம்'

## ஆர். ஜி.யிடம் ஜி. ஜி.

கொழும்பு, ஞாயிறு திருக்கோணேஸ்வராலயத்தைப் புனித நகரப்பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஆரம்பப்பட்டபோது இந்துக்களின் விஷயத்தில் தலையிடாதிருக்கும்படி தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி சேனநாயகாவை தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் எம். பியுமான திரு. ஜி ஜி பொன்னம்பலம் கேட்டுக் கொண்டார்.

கோணேஸர் ஆலயப்பகுதியில் முன்னர் பௌத்த விகாரை இருந்ததாகவும் இது பின்னர் அன்னியர் ஆட்சியின் போது அகற்றப்பட்டதாகவும் திரு. ஆர் ஜி சேனநாயகா கூறி கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை புனிதப் பிரதேசமாகப் பிரகடனம் செய்வதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதே திரு ஜி ஜி பொன்னம்பலம் கோணேஸ்வரர் ஆலயம் பாடல்பெற்ற ஸ்தலம் என்றும் இந்துக்களின் விஷயங்களில் வீணாகத் தலையிடவேண்டாமெனவும் திரு ஆர். ஜி. யைக் கேட்டுக் கொண்டார்.

திரு. ஜி ஜி. மேலும் பேசுகையில், கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை மட்டுமே புனிதநகரமாகப் பிரகடனம் செய்யுமாறு கோருவதாகத் தெரிவித்தார்.

## அண்ணாவின் உடல்நிலை பற்றி அஞ்சத்தேவையில்லை

### வைத்திய அறிக்கை கூறுகிறது

சென்னை, செப் 8 தமிழ்நாடு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரைக்கு உணவு உட்கொள்ளும் குழாயிலேயே சதைவளர்ந்திருப்பதாகவும் இதுபற்றி அதிகம் அஞ்சத்தேவையில்லையெனவும் உடல்நிலை தற்போது திருப்தியாக இருப்பதாகவும் வைத்திய அறிக்கை தெரிவித்துள்ளது.

திரு. அண்ணாதுரை மூக்கிலிருந்து வாயுள் பொருத்தப்பட்டுள்ள ஒரு டியூப்மூலமாகவே தற்போது உணவு உட்கொண்டு வருகின்றார். இவர் குளூக்கோஸ், பால், எலுமிச்சம்பழ ரசம் மற்றும் விட்டமின்கள் இந்த டியூப் மூலமாக அருந்தி வருகிறார். தொண்டையினுள் சதை வளர்ந்திருப்பதால் கடினமான உணவு அருந்த முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அறிவித்திருந்தபடி திரு. அண்ணாதுரை வரும் செவ்வாய்க் கிழமை நியூயோர்க் பட்டணமாவாரெனவும் நியூயோர்க்கிலுள்ள மெமோறியல் ஆஸ்பத்திரியில் இவர் சிகிச்சை பெறுவாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள ஆஸ்பத்திரியில் இருக்கும் முத

(8ம் பக்கம் பார்க்க)

## மீனவர் அஞ்சத் தேவையில்லை

நல்லூர், திங்கள் யாழ். மாவட்ட மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 3000 மீனவர் புகைப்படம் எடுக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றனர். "15-ம் திகதிக்குப்பின்னர் கடலில் வைத்து கடற் படையினரால் கைது செய்யப் படலாம் என்று அஞ்ச வேண்டியதில்லை. கடலில் மீனவர்களுக்கு தொல்லை கொடுக்கப் படமாட்டாது" என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா இன்று காலை தெரிவித்தார்.

## சிமெந்து கோட்டாவில் திடீர் வெட்டு

நல்லூர், திங்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்டு வந்த சிமெந்து கோட்டாவை சிமெந்து ஆலை அதிகாரிகள் திடீரென 25 சத வீதம் குறைத்துவிட்டதாக அறியப்படுகிறது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்வதற்கு சிமெந்துக் கூட்டுத்தாபனத்தினர் வழங்கி வந்த சிமெந்து பாக்கெட்டுகளின் தொகை இம்மாதம் குறைக்கப்பட்டுள்ளதாம்.

இதேசமயம் தென்னிலங்கையிலுள்ள இரண்டு தனியார் ஸ்தாபனங்களுக்கு பெருமளவு சிமெந்து பாக்கெட்டுகளை சிமெந்து ஆலை விற்பனை செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## திருப்பி கொடுக்க உத்தரவில்லை

நல்லூர், திங்கள் "எடுத்த காணி திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. துண்டிக் காணியையும் தொழில் அமைச்சர் திருப்பிக் கொடுக்க உத்தரவிடவில்லை" என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திருவேர்ணன் அபயசேகரா இன்று காலை தெரிவித்தார்.

தொழிற் பயிற்சி நிலையம் நிறுவுவதற்காக தொழில் இலாகா யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான துண்டியிலுள்ள காணியை எடுத்ததற்கு மாநகரசபையினர் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர். இந்தக்காணி சம்பந்தமாக

(8-ம் பக்கம் பார்க்க)

## 'ஏழைகளுக்கு நீதி கிடைக்காது போய்விடுகிறது'

### பதில் நீதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு 'இப்போதுள்ள சட்ட முறைகளால் ஏழைகளுக்கு நீதி கிடைக்காமற்போய்விடுகிறது. வழக்குகளை நடத்துவதற்கு அவர்கள் பெரும் செலவு செய்யவேண்டியுள்ளதும் இதற்கு ஒரு காரணம்'

இவ்வாறு இன்று கொழும்பில் சர்வதேசசட்ட மகாநாட்டை ஆரம்பித்து வைத்த உள்ளூராட்சி அமைச்சரும் பதில் நீதி அமைச்சருமான திரு. எம். திருச்செல்வம் எடுத்துக்கூறினார். தாம் ஒரு வழக்கறிஞர் என்ற நிலையிலேயே தாம் இதனைக் கூறுவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. டட்லிசேனநாயகா அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில் சமூக பொருளாதார துறைகளில் புத்துயிரளிக்க சட்டத்துறையினர் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

## 5000 குடும்பங்கள் வரட்சியால் பாதிப்பு

பம்பலப்பிட்டி, ஞாயிறு நாட்டில் இப்போது நிலவும் வரட்சி காரணமாக ஐயாயிரத்துக்கும் கூடுதலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வடமாகாணம், கிழக்கு மாகாணம், ஊவாமாகாணம், தென்பகுதியில் ஒரு பகுதி ஆகியவற்றிலுள்ளவர்களே வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க சமூகசேவைப்பகுதியினர் நடவடிக்கை எடுத்துவருவதாக இப்பகுதி டைரக்டர் டாக்டர் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

பதுளையில் 2500 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக இவர் தெரிவித்துள்ளார்.

ஏஜன்ட் நியமனம்

திரு. V. கணேசபிள்ளை, 109, சிவநகர், உருத்திரபுரம் என்னும் விலாசதாரரை உருத்திரபுரம் பகுதிக்கு ஏஜன்டாக நியமித்துள்ளோம் என்பதை 'ஈழநாடு' வாசகர்கட்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பண்ணையில்

## காற்று வாங்கச்சென்ற சிறுவர் தாக்கப்பட்டனராம்

நல்லூர், திங்கள் பண்ணைக் கடற்கரைக்கு காற்றுவாங்கச் செல்பவர்களுக்கு அங்கு நிற்கும் சில காடையர்கள் தொல்லை கொடுக்கிறார்களாம். கடந்த போயா தினத்தன்று மாலை பண்ணைக் கடற்கரைக்குச் சென்ற 5 சிறுவர்களைக் காடையர் கோஷ்டியொன்று தாக்கி அவர்களிடமிருந்த பணம் மோதிரம் போன்றவற்றை அபகரித்துவிட்டுத் துரத்திவிட்டதாம்.

பண்ணைப்பாலத்தின் மத்தியில் அமைந்துள்ள 2 மடங்களிலிருந்த சுமார் 20 பேர் கொண்ட காடையர் கோஷ்டி அவ்வழியேபோகாற்று வாங்கிக்கொண்டு நின்ற சிறுவர்களை விரட்டித் துரத்தியதுடன் பொருட்களையும் அபகரித்ததாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கீழ்க் குறிக்கப்படும் பதவிகளுக்கு யாழ்ப்பாண ஐக்கிய தேசிய சங்கங்களின் சமாசம் விண்ணப்பங்கள் கோருகின்றது. தகைமையுடையோர் 30-9-68 ம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் பொதுமனேஜர், யாழ்ப்பாண ஐக்கிய தேசிய சங்கங்களின் சமாசம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பிப்போர் பதிவுத் தபாலின் மேல் உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிக்கவும்.

1. உதவி மனேஜர்.
2. டிசைனர்.
3. லேபரர்.
4. காவலாளி.

விபரங்கள் மேற்காட்டிய விலாசத்தில் காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம். 971

# வாழ்க்கைச்செலவு சரிபாதியாகக் குறையும்

## அரசாங்கம் மூன்று அம்சத் திட்டம் தயாரித்துள்ளது

கொழும்பு, ஞாயிறு அடுத்து வரும் ஆறுமாத காலத்திற்குள் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கென மூன்று அம்சத் திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

உற்பத்தி நிலையங்களிலிருந்து விற்பனை ஸ்தாபனங்களுக்குப் பொருட்களைக் கொண்டுசெல்லும் வாகனங்களை அதிகரிப்பது, மரக்கறிவகை தெங்குப்பொருள் போன்ற உள்நாட்டுப் பொருட்களைச் சேகரித்து விநியோகிப்பதில் தீவிரமாக ஈடுபட, விற்பனை இலாகாவினரைத் துரிதப்படுத்துவது, அத்தியாவசிய உப-உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவது ஆகியவையே இந்த மூன்று அம்சத் திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ், அமெரிக்காவிலும், ஜப்பானிலுமிருந்து கிடைக்கும் உதவியின்கீழ் லொறிகள் அதிகமாக இறக்குமதிசெய்யப்படும். அரிசி இறக்குமதிக் குறைப்பின் மூலம் மிஞ்சும் பணத்தில் வேறு தேவையான பொருட்கள் தருவிக்கப்படும்.

## 'ஆசிரிய—மாணவர் நல்லுறவுக்கு கூட்டு வாழ்க்கை உதவும்'

### அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்திய ராஷ்டிரபதி ஹுசெயின்

சிதம்பரம், செப். 8 ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே கூட்டு வாழ்க்கைக்கு உதவும் சந்தர்ப்பங்கள், இரு சாராரும் ஒருவரையொருவர் பரஸ்பரம் உணர்ந்துகொள்ளவும், அவர்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கவும் வழிவகுக்குமென இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின், இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கருத்துத் தெரிவித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எஞ்ஜினியரிங், மருத்துவ மாணவர்களின் விடுதிக்கான கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே இவ்வாறு டாக்டர் ஹுசெயின் கூறினார்.

பழைய குருகுலக் கல்வி முறையின் லட்சியத்தை நாம் இப்போது அடைய முடியாதென்றாலும், அந்த லட்சியத்தின் ஒரு பகுதியையாவது, இத்தகைய மாணவர் விடுதிகள் அளிக்கும் கூட்டு வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் மூலம் பெறமுடியுமெனத் தாம் நம்புவதாக ராஷ்டிரபதி கூறினார்.

ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் புத்தகப் படிப்பை மட்டும் போதிப்பதுடன் நின்றுவிடாது, அவர்களை அறிவும், பண்பும் உள்ளவர்களாக்க முயலவேண்டும் என்று டாக்டர் ஹுசெயின் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களுக்குத் தேசியக் கல்விமுறை போதிக்கப்படவேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். நாட்டிலுள்ள வெவ்வேறு வகுப்பினருக்குமிடையே ஒற்றுமையை வளர்க்கும் வகையில் கல்வி முறை அமையவேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விசேஷ பட்டமளிப்புவிழாவொன்றில், ராஷ்டிரபதி டாக்டர் ஹுசெயினுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

## பிரயாணிகள் பாத யாத்திரை

யாழ்ப்பாணம், திங்கள் முன்றுமணி நேரமாகப் பஸ்நிலையத்தில் காத்திருந்தும் பஸ் வராததால் பள்ளிக்கூட மாணவர்கள், இளம்பெண்கள், வயோதிபர்கள் போன்ற ஏராளமான பிரயாணிகள், பாதயாத்திரை சென்றனர். மீசாலையிலிருந்து சாவகச்சேரி வரை இந்த பாதயாத்திரை நடந்தது.

## 5 சத முத்திரை இல்லை

கழிபுரம், ஞாயிறு இப் பகுதியிலுள்ள தபாற்கந்தோர்களில் ஐந்து சத முத்திரை பெற்றுக்கொள்ள முடியவில்லையாம்.

## இவர்களை பொலிஸ் தேடுகிறது

அளவெட்டி, திங்கள் மயிலிட்டி வாசியான அம்பலம் கந்தையா [வயது 40] என்பவர் அலவாங்கு பொல்லால் தாக்கப்பட்டு காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் தன்னை மாமனும், மச்சானும் தாக்கியதாகவும், உறுதிப்பத்திரம் ஒன்றில் தான் கையெழுத்திட மறுத்ததாலேயே தாக்கியதாகவும் கூறியுள்ளார். சந்தேக நபர்களைப் பொலிசார் தேடுகின்றனர்.

⁂ ⁂ ⁂

சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியம் என்பவரது வீட்டை உடைத்து வானொலி இனந்தெரியாதவர்கள் றேடியோ உட்பட உடுப்புகள் முதலியவற்றைக் களவாடினாராம். இதுசம்பந்தமாக இதுவரை எவரும் கைதாகவில்லை, சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

⁂ ⁂ ⁂

அல்வாய் வடக்கைச் சேர்ந்த பொன்னு வள்ளி என்பவரைத் தாக்கி 350 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டது சம்பந்தமாக கந்தன் குலசிங்கம் என்பவரை பருத்தித்துறைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

## பிள்ளைகளை கத்தியால் வெட்டினாராம்

### தந்தை கைது

திருகோணமலை, ஞாயிறு திருகோணமலை உப்புவெளியில் உள்ள ஜமாலியா வீதியைச் சேர்ந்த முகமது ராஜா என்பவர் குடும்பத் தகராறு காரணமாகத் தனது புத்திரர்களான முகமது ராஜா அபிஹசன் முகமது ராஜா அபூபாஸிப் ஆகியஇரு இளைஞர்களையும் கத்தியால் ஒன்றினால் காலில் வெட்டிக் காயப்படுத்தினாராம். முகமது ராஜா பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### தேவை

நல்ல அனுபவமுள்ள ஆண் டெய்லர் தேவை. நேரில் வரவும். லிவருஸ்ஸ், 12, மெயின்வீதி, யாழ்ப்பாணம். 88

### விற்பனைக்கு

தேமஸ் (Thermos) பிளாஸ் உதிரிப்பாகங்கள் மீண்டும் வந்திருக்கின்றன. உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள். எஸ். சவரிமுத்து. 73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 87

காணி:

கிளிநொச்சி சந்தியில் 12 ஏக்கர் நெற்காணி விற்பனைக்கு. அரை மைல் தூரம் மோட்டார் வாகனத்தில் செல்லக் கூடிய ரோட்டு உண்டு. இரண்டாம்வாய்க்காலில் வெகு வாய்ப்பான இடம். சொந்தக்காரர் சகுபடிசெய்து நல்ல விளைச்சல் கிடைத்தது. தொடர்பு கொள்க: எஸ். சுந்தரலிங்கம், பிரக்கிராசியும் நொத்தாரிசும், இல. 381, டாம் வீதி, கொழும்பு. 86

துப்பாக்கி:

சிமித் விசெஷன் இரட்டைக் குழல் துப்பாக்கி-லைசென்ஸ் உடன் விற்பனைக்குண்டு. சி. சிவஞானம், 47, கோயில் வீதி, யாழ்ப்பாணம். 85

## திடீர் வேலை நிறுத்தம்

திருகோணமலை, ஞாயிறு திருகோணமலை துறைமுக [சரக்கு] கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த ஐக்கிய துறைமுக தொழிலாளர் சங்கஅங்கத்தவர்கள் நேற்று மாலையிலிருந்து திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். கப்பலில் கடமையாற்றும் இவ்வூழியர்களின் வேலைநிறுத்தத்துக்கு காரணம் ஒரு புது போர்மனை நியமனம் செய்ததுதான் எனத் தெரியவருகிறது. இந்த போமனின் நியமனத்தைத் தொழிலாளர் சங்கத்தினர் எதிர்க்கின்றனராம். இந்த வேலையில் லண்டனுக்கு தேயிலை ஏற்றுமதியாக்க மஷீர் என்னும் சரக்குக் கப்பலும் அவுஸ்திரேலியாவுக்குச் சரக்கேற்றும் ஜினகாரா என்னும்கப்பலும் துறைமுகத்தில் காத்துக் கிடக்கின்றன.


விண்ஸர்

தினசரி 3 காட்சிகள்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
மாடிவீட்டு மாப்பிள்ளை

4-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
AVM. ராஜன் - புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

சாவகச்சேரி
வெல்லி சினிமா
தினசரி 6-30 9-30
போயாதினங்களில் 2-30
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
பூம்புகார்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Ann Margaret
Tony Franciosa
in
THE SWINGER
(Color)

75-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

7-வது வெற்றி வாரம்

லிங்ஸ்லி—பிளாஸா
(கொழும்பு)
வெலிங்டன்—விஜயா
(யாழ்நகர்) (மதுநகர்)
ரவிச்சந்திரன்—ஜெயலலிதா
நாகேஷ்—மனோரமா
நடித்த
ஸ்ரீவிநாயகா பிக்சர்ஸ்
நான்

6-வது வெற்றி வாரம்
கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்

11-ந் திகதி முதல்
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
நடித்த
நான் ஆணையிட்டால்

ஈழநாடு
தினக்குறிப்பு
1969
அழகிய கடதாசியில்
வழமைபோல்
சகல விபரங்களுடனும்
தயாராகிக்கொண்டிருக்கிறது.
விற்பனையாளர்கள் மனேஜருடன்
தொடர்பு கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘செக். நாட்டில் அந்நிய துருப்புகள் இன்னும் சில காலம் தங்கியிருக்கும்’

## செக். உதவிப்பிரதமர் ஒருவரான டாக்டர் ஹூஸாக் அறிவிப்பு

பிராக், செப்டம்பர் 8

**செக்கோஸ்லாவாக்கியாவின் உதவிப் பிரதமர் ஒருவரான டாக்டர் ஹூஸாக், அந்நிய துருப்புகள் நாட்டில் இன்னும் சில காலம் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். டாக்டர் ஹூஸாக், ஸ்லோவாக் கம்யூனிஸ்ட்கட்சி தலைவருமாவார்.**

நாட்டில் தங்கியுள்ள அந்நிய துருப்புகளுக்கும், செக். அதிகாரிகளுக்குமிடையேயான உறவுகள் சம்பந்தமாக ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டுமெனவும் டாக்டர் ஹூஸாக் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள நிலைமையை நீண்டகாலம் தொடர்ந்து நிலை அனுமதிக்கக்கூடாது என்றும், விரைவில் ஒருமுடிவு எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

### ஹூஸாக்குக்கு ரஷ்யா ஆதரவு

டாக்டர் ஹூஸாக்கின் பேச்சுக்களுக்கு ரஷ்யப் பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் [illegible] வருகின்றன.

அதே சமயம், செக். தலைவர் திரு. டுப்செக்கின் பேச்சுக்களுக்குச் சிறிய இடமே தமது பத்திரிகையில் ரஷ்யப் பத்திரிகைகள் கொடுக்கின்றன.

இது டாக்டர் ஹூஸாக்கைத் தமக்குச் சாதகமான ஒரு தலைவராக ரஷ்ய தலைமைப் பீடம் கருதத் தொடங்கியுள்ளதைச் சுட்டிக்காட்டுவதாக இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

### செக். தலைவர்களின் நடவடிக்கைகள் பற்றி ரஷ்யா கவலை

பிராக்குக்கு விஜயம் செய்துள்ள ரஷ்ய உதவி வெளியுறவு மந்திரி திரு. குஸ்னெட்ஸோவ் செக். தலைவர் திரு. டுப்செக்கைச் சந்தித்துப் பேசியுள்ளார். அத்துடன், பிரதமர் திரு. செர்னிக்கையும் அவர் கண்டு பேசினார். முன்னதாக, செக். ஜனாதிபதி திரு. ஸ்வொபோடாவைத் திரு. குஸ்னெட்ஸோவ் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தார்.

செக். தலைவர்களுடன் சோவியத் உதவி வெளியுறவு மந்திரி நடத்திய பேச்சுக்களில், மாஸ்கோவில் ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு நாடு திரும்பிய செக். தலைவர்கள் நாட்டில் மாமூல் நிலைமையைத் தோற்றுவிப்பதற்கென எடுத்து வரும் நடவடிக்கைகள் ரஷ்ய தலைமைப் பீடத்துக்குத் திருப்தியளிக்கவில்லை என்பதே வலியுறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### சுவாஸிலாந்தின் கொள்கை

லண்டன், செப் 8

விடுதலையடைந்துள்ள சுவாஸிலாந்து வல்லரசுப் போட்டியிலிருந்து விலகியிருக்குமென்றும், அதே சமயம் இன, மத சகிப்புத்தன்மைக்கு உதாரணமாக விளங்கும் என்றும் அந்த நாட்டின் பிரதமர் அறிவித்திருக்கிறார்.

### தாலிக்கொடி திருட்டு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

காரைநகர் - களபூமியைச் சேர்ந்த ஒரு பெண்மணியின் இல்லத்திலிருந்து தாலிக்கொடி நள்ளிரவில் திருடப்பட்டுவிட்டதாக புகார் செய்யப்பட்டிருக்கிறது.

### பிரெஞ்சுத் தலைநகரில் மே. ஜெர்மன் வெளியுறவு மந்திரி

பாரிஸ், செப் 8

மேற்கு ஜெர்மன் வெளியுறவு மந்திரி திரு. வில்லி பிராண்ட், பாரிஸில் வெளியுறவு மந்திரி திரு. டெப்ரேயைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

இரு மந்திரிகளும் கிழக்கு ஐரோப்பிய நிலைமை, ஐரோப்பிய பொதுச்சந்தை ஆகிய விஷயங்கள் பற்றிக் கலந்தாலோசித்தனர்.

பின்னர் நிருபர்களிடம் பேசுகையில், செக்கோஸ்லாவாக்கியாவை விட்டு அந்நிய துருப்புகள் வெளியேறிவிடுமென்ற நம்பிக்கை மேற்கு ஜெர்மனியிடம் உறுதியாக இருப்பதாகத் திரு. வில்லி பிராண்ட் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய பொதுச்சந்தை பற்றி அவர் குறிப்பிடுகையில் ஐரோப்பிய நாடுகளுடன் தமது வர்த்தகத்தை விஸ்தரிப்பதில் பிரான்சும் மேற்கு ஜெர்மனியும் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறினார்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், மேற்கு நாடுகளுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நெருக்கடி நிலைமை தளர்வது இனி சோவியத் யூனியனையே பொறுத்ததாகும் என்று திரு. பிராண்ட் கூறினார்.

### நினைவு விழா

குரும்பசிட்டி, ஞாயிறு

கன்னாகம் பட்டினசபை நூல்நிலைய ஆய்வுக்குழுவின் ஆதரவில் இம்மாதம் 11-ம் திகதி பட்டினசபை மண்டபத்தில் மகாகவி பாரதியார் நினைவாஞ்சலி நினைவு விழா நடைபெற இருக்கின்றது.

### வழக்கு தள்ளுபடி

குரும்பசிட்டி, ஞாயிறு

சென்றவருடம் டிசம்பர் மாதம் 8-ம் திகதி மண்டைதீவைச் சேர்ந்த டேவிட் பெர்னாண்டோ என்பவருக்குக் கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் குற்றம் சாட்டி தவசி ஞானப்பிரகாசம் என்பவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் இடையே வழக்காளி தரப்பு வழக்கறிஞர் வழக்கைத் தொடர்ந்து நடாத்தவிரும்பவில்லை என நீதிபதியிடம் தெரிவிக்கவே நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

எதிரிசார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். சங்கானை பொலிஸ் தரப்பில் புறக்டர் எஸ். நடராசா வழக்கை நடாத்தினார்.

### டாக்டர் பேர்னாட்டின் மற்றுமோர் இருதய மாற்றுப் பொருத்தம்

கேப்டவுன், செப் 8

தென்னாபிரிக்காவில் கேப்டவுன் ஆஸ்பத்திரியில், உலகின் முதல் இருதய மாற்றுப் பொருத்தத்தை நிகழ்த்திய டாக்டர் பேர்னாட்டும் மற்றும் சில டாக்டர்களும் அந்த ஆஸ்பத்திரியில் மூன்றாவது இருதயமாற்றுப் பொருத்த சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர்.

இச் சத்திர சிகிச்சை மூலம் அபிரிக்கப் பெண்மணி ஒருவரின் இருதயம் 58 வயதான வெள்ளையர் ஒருவருக்கு மாற்றிப் பொருத்தப்பட்டுள்ளது. இந்த வெள்ளையரின் இருதயம் வழமைபோல் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்றாவது இருதயப்பொருத்த சத்திர சிகிச்சை ஒருமணி நேரத்தில் முடிந்துவிட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அறிவித்தன.

### ஸலசாருக்கு சத்திர சிகிச்சை

மாட்ரிட், செப் 8

போர்த்துக்கலின் சர்வாதிகாரியான ஸலஸாருக்கு மிக நுணுக்கமான சத்திர சிகிச்சை ஒன்று செய்யப்பட்டுள்ளது.

திரு. ஸலஸார் 1932ம் ஆண்டு தொடக்கம் போர்த்துக்கலின் தலைவராக இருந்து வருகிறார்.

அண்மையில் அவர் தமது கோடைவிடுமுறை வாசஸ்தலத்திலுள்ள கதிரையிலிருந்து தரையில் விழுந்ததன் விளைவாக அவரது தலையில் காயம் ஏற்பட்டிருந்தது.

சத்திரசிகிச்சையை அடுத்து அவரது உடல்நிலை முன்னேறி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது அவருக்கு வயது 79 ஆகும்.

### சாபா பிரச்னை தெ. கி. ஆசிய அமைதிக்கு ஆபத்து

கோலாலம்பூர், செப் 8

சாபா பிரச்னை தென் கிழக்காசிய அமைதிக்கு ஆபத்தாகலாம் என்று மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

சாபா தனக்கே சொந்தம் என்று பிலிப்பைன்ஸ் ஆட்சியாளர் சமீபத்தில் ஒரு மசோதாவை நிறைவேற்றியிருந்தது.

பிலிப்பைன்ஸ் மலேஷியா கருத்துவேறுபாட்டை சீனா தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள முனையலாம் என்று கூறிய துங்கு அப்துல் ரஹ்மான் மலேசியா தனது ஆட்சி உரிமையைப் பாதுகாத்துக்கொள்ளத் தவறாதென்றார்.

### திருநாள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

யாழ்ப்பாணம் [illegible] அடைக்கலமாதா [illegible] திருநாள் இன்று நடைபெறும் மாதாதிருச்சொரூப [illegible] சுற்றுப்பிரகாரத்துடன் முடிகின்றது.

# எந்த நெருக்கடியையும் இந்தியா சமாளிக்குமென இந்திரா உறுதி

## ‘அத்தியாவசியத் தேவைகளில் தன்னிறைவு காண்பதே லட்சியம்’



கான்பூர், செப். 8

**இந்தியாவை எதிர்நோக்கும் உள், வெளி நெருக்கடிகள் அனைத்தையும் வெற்றிகொள்ளும் உறுதி இந்திய அரசாங்கத்துக்கு இருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, நேற்று கான்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.**

நாட்டினுள்ளேயே சில தீய சக்திகளின் நடவடிக்கைகளை இந்தியாவின் தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் உறுதியான கொள்கை, பலனற்றதாக்கி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வெளியிலிருந்துவரும் நெருக்கடி எதையும் சமாளிப்பதற்கும் இந்திய அரசாங்கம் தயாராயிருப்பதாகப் பிரதமர் உறுதிகூறினார். இந்திய நாட்டின் சுதந்திரத்துக்கு ஊறுவிளைக்கும் எந்தச் சக்தியையும், அது உள்ளிருந்து வந்தாலும்சரி வெளியிலிருந்து வந்தாலும் சரி, இந்தியா முறியடிக்கும் என்றார் திருமதி இந்திரா.

### செக். நிலைமை பற்றிய கொள்கை

செக்கோஸ்லவாக்கிய சம்பவம் குறித்து இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொள்கை பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில், நீண்ட, கவனமான ஆலோசனைக்குப் பின்னரே அது கடைப்பிடிக்கப்பட்டதாகவும், அதை எதிர்ப்பவர்களின் வாதங்களைப் பார்வையிடுவது [illegible] சரி, வெளியிலும் சரி, தம்மால் சந்திக்க முடியுமென்றும் கூறினார்.

### தன்னிறைவு

பின்னர் கான்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், 1970-ம் ஆண்டுவாக்கில், உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற்றுவிடுமெனத் தாம் நம்புவதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

இன்னும் 10 ஆண்டுகளில், நாட்டின் அவசிய தேவைகளில் தன்னிறைவு காண்பதே இந்திய அரசாங்கத்தின் லட்சியமாகும் என்று அவர் மேலும் கூறினார்.

### அந்நிய உதவி

இந்தியாவுக்குக் கிடைக்கும் அந்நிய உதவி ஒன்றும் தானமல்ல என்று திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டார். அந்நிய உதவியைப் பெருமளவு திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய கடனாகும் என்பதைப் பிரதமர் நினைவூட்டினார். இது உண்மையிலே நாட்டுக்குப் பெரும் சுமையாகும் என்றார் அவர்.

இந்தியாவுக்கு உதவியளித்துள்ள அந்நிய நாடுகளுக்கு இந்தியா நன்றியுடையதாக உள்ளது என்றும் திருமதி இந்திராகாந்தி கூறினார். ஆனால் எந்த வெளிநாட்டையும் இந்தியாவின் சுயமரியாதையைப் பாதிக்க அனுமதிக்க முடியாது என்பதைப் பிரதமர் வலியுறுத்தினார்.

### பிரிவினைக்கு எதிர்ப்பு

இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும் சில பிரிவினைச் சக்திகள் நாட்டில் இயங்கிவருவதை பற்றிப் பிரதமர் மக்களை எச்சரித்தார். அத்தீய சக்திகளை முறியடிப்பதில் அரசாங்கத்துடன் தீவிரமாக ஒத்துழைக்குமாறு அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

வகுப்பு, இன, ஜாதி வெறி இல்லாத இந்தியா ஒன்றுபட்ட நாட்டில் இருக்க வேண்டும் என்று பிரதமர் இந்திரா காந்தி விருப்பம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வத்திடம் சரணு கதியடைந்தவர் எந் நிலையிலும் முணு முணுக்கமாட்டார். யார் மீதும் குற்றம் குறை கூறமாட்டார். எல்லா நிலையிலும் பூரணசாந்தியும் ஆனந்தமுமடைவர். இதுவே சரணுகதிக்கு உண்மையான அறிகுறி.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

கீலக வருஷம் ஆவணி மாதம் 24-ந் திகதி
(9-9 68)

## கடற்றொழில் அபிவிருத்தி

மீன் ஏற்றுமதி செய்ததன் மூலம் சென்ற வருடத்தில் எமது நாட்டுக்கு ஏழுலட்சம் ரூபாய் அந்நிய செலாவணி கிடைத்திருப்பதாக கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் ஆட்சிமன்றத்தில் அறிவித்திருக்கிறார். நமது நாட்டிலிருந்து மீன் ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம் லட்சக்கணக்கில் நமது நாட்டுக்குவருமானம் கிடைத்திருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்ளவேண்டும்.

ஆனால் நமது நாட்டுக்குத் தேவையான மீன் இன்னும் நம் தீவைச் சூழ்ந்துள்ள கடலிலிருந்து பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை. உள்நாட்டிலேயே மீன் விலை 'யானை விலை குதிரை விலை' ஆக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இன்னமும் மீன் நிறுத்து விற்கும் நிலைக்கு வரவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாட்டின் சகல பகுதிகளிலும் நல்ல மீன் தாராளமாகவோ நியாயமான விலையிலோ கிடைப்பதாக இல்லை. உள்நாட்டுத் தேவையை பூர்த்திசெய்த பின்னரே நமது பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படவேண்டும். இதுவே நியாயம். உள்நாட்டில் மீனுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறதென்பதற்கு வெளிநாடுகளிலிருந்து டப்பாக்களில் அடைக்கப்பட்ட மீன்களையும் மாசிக் கருவாட்டையும் இறக்குமதி செய்வதே போதிய சான்றாகும். நாம் ஏழு லட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யும் மீனைவிட டின்களில் அடைக்கப்பட்டு எழுபது லட்சம் ரூபாய்க்கு இங்கு இறக்குமதி செய்யப்படுகிறதோ என்னவோ?

மீன்களைப் பதனிட்டு டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான தொழிற்சாலைகளை இங்கு கடற்றொழில் கைத்தொழில் அமைச்சு பல்வேறு கரையோரப் பகுதி மாகாணங்களிலும் துரிதமாக நிறுவுவது அந்நிய செலாவணியைப் பெருமளவில் மீதப்படுத்துவதற்கு வழிவகுப்பதாக இருக்கும்.

கடற்றொழில் நல்லமுறையில் பெருமளவில் விருத்தியடையவேண்டுமானால் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கு உதவியும் ஊக்கமும் போதிய பாதுகாப்பும் அளிக்கவேண்டியது அமைச்சினதும் அரசாங்கத்தினதும் கடமையாகும். கள்ளக்கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதற்கு மட்டுமல்ல மீனவர்களும் வின் தொல்லையைத் தவிர்ப்பதற்கும் அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் உதவிசெய்யும் என்பது உண்மையே. ஆயினும் அடையாள அட்டைகள் பற்றி மீனவர்களுக்குச் சரியான முறையில் விளக்கம் கொடுக்காமல் அவர்களைக் கடலிலும் பரிசோதனை செய்வதற்குக் கடற்படையினருக்கு அதிகாரம் கொடுப்பதென்பது உண்மையாக இருந்தால் அதனால் மீனவரின் தொல்லைகளுக்குள்ளாக நேரிடுவதுடன் அவர்கள் நிம்மதியாகத் தங்கள் தொழிலையும் செய்யமுடியாதுபோகும்.

புயல், கடல் கொந்தளிப்பு, மிகுந்த ஆகிய வைகளினால் பாதிக்கப்படும் மீனவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நஷ்டஈடோ மற்றும் உதவிகளோ அளிக்க முன்வருவதும் கடற்றொழில் விருத்திக்கு அவசியமாகும்.

# செக்கோஸ்லாவேக்கியாவை இருள் கவ்வுகிறது

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் ஆசிரியரான திரு. பிராங்க்மொரேய்ஸ் சமீபத்தில் செக்கோஸ்லவேக்கியாவுக்குச் சென்று திரும்பியுள்ளார். அண்மையில் அந்நாட்டில் இடம் பெற்ற ரஷ்ய ஆக்கிரமிப்பின்போது அங்கு நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றியும், தாம் நேரில் பார்த்த, கேட்ட விஷயங்கள் பற்றியும் இக்கட்டுரையில் திரு. மொரேய்ஸ் விமர்சிக்கின்றார்.

ஆஸ்டிரிய எல்லைப் புறத்தில் ஓர் இடத்திலிருந்து செக்கோஸ்லவேக்கியாவுக்குச் சென்று, பிராக்கில் மூன்று நாட்கள் தங்கியிருந்துவிட்டு இப்போது தான் நான் திரும்பியிருக்கிறேன். இந்த நாட்களில் செக்கோஸ்லவேக்கியாவுக்குள் போவதோ அல்லது அங்கிருந்து வெளியே வருவதோ சாதாரணமான காரியமல்ல. ஆனால், வியன்னாவிலுள்ள சில ஆஸ்டிரிய நண்பர்கள் ரஷ்ய மொழியில் ஒரு சிபார்சுக் கடிதம் கொடுத்திருந்தார்கள். அதனால் நாங்கள் உள்ளே பிரவேசிப்பதும், வெளியே வருவதும் கூடியவரையில் சௌகரியமாயிருந்தன.

ஸ்லவேகடாவும், டூப்செக்கும் மாஸ்கோவிலிருந்து திரும்பி வந்த அன்று நாங்கள் செக்கோஸ்லவேக்கியாவுக்குள் போனோம். சோவியத்—செக். கூட்டறிக்கை அன்றுதான் வெளியிடப்பட்டது. அன்று மாலை தான் பிராக்கிலிருந்து ரேடியோ மூலம் டூப்செக் தன் நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோள் வெளியிட்டார். அவர் பேசிக்கொண்டிருந்தபோது இருமுறை பேச முடியாமல் தொண்டை அடைத்துக்கொண்டு அழுதார் (நாங்கள் தங்கியிருந்த) ஹோட்டல் சிப்பந்திகள், வரவேற்பு மேஜைக்குப் பின்னால் நின்றுகொண்டு, ஆழ்ந்த கவனத்துடன் அந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நாம் மீண்டும் மோசம் செய்யப்பட்டுவிட்டோம் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள் அவர்களுடைய முகங்களிலும், கண்களிலும் அந்த உணர்ச்சியின் வேதனையும், மனக்கசப்பும் ஏமாற்றமும் நன்கு பிரதிபலித்தன.

வெளியே, வென்ஸஸ்லாஸ் சதுக்கத்தில் உள்ள சிலையைச் சுற்றி திரளான கூட்டம் காணப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் ஆகிய இருசாராரும் அங்கு காணப்பட்டனர். வயதானவர்களும், சில கிழவர்களும் கூட இருந்தனர்.

### சிலுவைச் சின்னம்

வென்ஸஸ்லாஸ் நினைவுச் சின்னத்தின்அடியே பாதையில், கறுப்பு கொடியிட்ட சதுரமொன்றை மாணவர்கள் வரைந்திருந்தனர். அந்தச் சதுரத்திற்குள் ஏசுநாதரின் சிலுவைச் சின்னமொன்று இருந்தது. அதன் பக்கத்தில் இரண்டு மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன சிலுவையைச் சுற்றி மலர் வளையங்கள் காணப்பட்டன. அந்த சதுக்கத்தில் ரஷ்ய டாங்கிகளாலும், சிப்பாய்களாலும் கொன்று குவிக்கப்பட்ட தமது தோழர்களின் ஞாபகார்த்தமாக மாணவர்கள் அவசரம் அவசரமாக இதைச் செய்திருந்தார்கள்.

### வேதனையின் குறிகள்

நினைவுச் சின்னத்தைச் சுற்றியிருந்த உயர்ந்த மேடையில் கோஷ்டி கோஷ்டியாக மாணவர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுடைய இளம் முகங்களில் வேதனையின் குறிகள் காணப்பட்டன. ஆனால் அவர்கள் நல்ல உயிர்த் துடிப்புடனிருந்தார்கள். அவ்வப்போது ரஷ்யர்களுக் கெதிராகவும், தம்முடைய நாட்டின் சுதந்திரத்தை விட்டுக் கொடுத்து விட்டார்கள் என்று அவர்கள் நினைத்த தம் தலைவர்களுக் கெதிராகவும் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். கீழே கோஷ்டிகள் டூப்செக்கின் ரேடியோப் பிரசங்கத்தைப் பற்றி பரபரப்புடன் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

தம்முடைய தலைவர்கள் தம்மைக் காட்டிக்கொடுத்து விட்டார்களென்றே மொத்தத்தில் மக்கள் நினைக்கிறார்களென்பது தெளிவாகத் தெரிந்தது.

### பெண் அழுதாள்

அந்தத் தியாகிகள்சின்னத்திற்கெதிராக ஒரு கோஷ்டியினருடன் நான் நின்றுகொண்டிருந்தேன். எனக்குப் பக்கத்தில் ஒரு பெண் மெதுவாகத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். மேடை மீது நின்று கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவன் கோஷங்களை எழுப்பிக் கொண்டேயிருந்தான். மக்களின் எதிர்ப்புணர்ச்சியையும், ஏமாற்றத்தையும் இந்த இருவரும் பிரதிபலித்துக் கொண்டிருந்தார்கள்

"நம்முடைய இளைஞர்கள் தான் நம்மைக் காப்பாற்றப் போகும் வீரர்கள். தலைமயிரை நீளமாக வைத்துக் கொண்டிருந்த இந்தப் பையன்களையும், மிகக் குறைந்த கச்ச ஆடைகளை அணிந்திருந்த இந்தப்பெண்களையும் பார்த்து நாம் கேலி செய்தோமே. இப்போது அவர்களைப் பாருங்கள். வீரனைப்போல சாவதெப்படி என்பது இளைஞர்களுக்குத் தான் தெரியும்" என்று ஒரு வயோதிபமாது துவரத்துடன் கூறினள்.

அங்கிருந்த தாக்கப்புறப் பட்டுவந்த ... [illegible]

போது வழியில் இரண்டு மாணவர்களைப் பார்த்தோம் அவர்கள் இரண்டு மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்துக்கொண்டு நடந்தார்கள். காற்றில் அணைந்து போய்விடாமல் மெழுகுவர்த்தி வைக்கையால் மறைத்துக் கொண்டிருந்தார்கள். முடிந்த வரையில்சுதந்திரம் என்ற சுடரை செக். மக்கள் அணையாமல் காப்பார்கள்

செக்கோஸ்லாவாக்கியாவில் மிகவும் துரிதமாக சகஜ நிலைமை திரும்பச் செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றிய உடன்பாடு" என்று கூறப்பட்டிருக்கிறது. ஏழாவது பந்திதான் செயல் முறை பற்றியது. செக்கோஸ்லவாக்கியாவில் சகஜ நிலைமை ஏற்படும்போது இந்தத் துருப்புகள் வாபஸ் பற்றிய நிபந்தனைகள் ஒப்புக் கொள்ளப்பட்டன" என்றுமட்டும்தான் அதில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிபந்தனைகள் என்ன? அறிக்கையில் அந்த விபரங்கள் வெளியிடப்படவில்லை. இப்போதுகூட ரஷியர்கள் தம்முடைய சௌகரியத்திற்கும், நிர்ப்பந்தங்களுக்கும் வேண்டிய இடம் வைத்துக்கொண்டிருக்கிருர்கள் என்பது தெளிவு.

அருமை நண்பன் ஒருவன் ... திராதவியாதியினால் ... சக்கொஞ்சமாகச் சாவ... பார்ப்பது போலிருந்த... மால் என்ன செய்ய மு... யும் என்ற தீர்க்கதி ட... இவைதான் இது அதி... படுத்தியது. விடுதலைய... ஒரு குற்றமும் செய்ய... மக்களையும் நோக்கி பீர... கள் குறி பார்ப்பது ச... தான சகவாழ்வா? ... என்ன வாழ்வோ! கல்லே... ரசங்களைச் சேர்ந்த சே... ரத் டாங்கிகளும், மற்... போர் சாதனங்களும் ஆ... டிரிய எல்லைக்குப் போவ... யும், பிராக் தெருக்களில... நான் பார்த்தேன். பெ... பானவை தெருச் சந்திக... சோவியத் சிப்பாய்கள் ... பாக்கிகளுடன் தயார் நி... யில் இருப்பதைப் பா... தேன்.

செக்கோஸ்லாவாக்... வில் இரவின் இருள க... ஆரம்பித்திருக்கிறது. ஆ... சோவியத் ரஷ்யாவின் எ... ணத்திலும், உலகத்தி... தான் இருளின் கருமை ... மையாக இருக்கிறது.

— பிராங்க் மொரேய்ஸ் —

பதைக் காட்டுவது போலிருந்தது இந்தக் காட்சி.

### தவறான மதிப்பு

ரஷியர்கள் ஆயிரம் சொன்னாலும் செக்கோஸ்லவாக்கியா படையெடுக்கப்பட்ட நாடுதான். படையெடுப்பு செய்த நாட்டின் துருப்புகள் வசந்தான் அந்த நாடு இருக்கிறது. ராணுவ ரீதியில் ரஷ்யர்கள் ஒரு போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டார்கள். ஆனால் அரசியல் யுத்தத்தில் இன்னும் அவர்கள் வெற்றி பெறவில்லை. அரசியல் துறையில் அவர்கள் மிகப் பெரிய தவறை இழைத்து விட்டார்கள. செக்கோஸ்லவேக்கியாவில் தலையெடுத்த புதிய மார்க்ஸிஸத்திற்கு கூச்சல் போடும் ஒரு சிலரின் ஆதரவுதான் இருக்கிறதென்றும் சோவியத் குண்டு மாரி பொழிந்தவுடன் அந்தப்புதிய மார்க்ஸிஸம் இடந்தெரியாமல் புகையோடு புகையாக மறைந்து விடுமென்றும், ரஷ்யர்கள் தவறாக மதிப்பிட்டு விட்டார்கள். ஆனால் டூப்செக்கை மீண்டும் அவர்கள் திருப்பிக்கொண்டுவர வேண்டியதாகி விட்டது. ஆனால் டூப்செக்கை உயிருடன் திருப்பிக் கொண்டு வருவதற்கு அவர்கள் கேட்டவிலை மிக அதிகமானது. அதாவது செக்கோஸ்லவேகியாவில் ரஷியத் துருப்புகள் காலவரையறையின்றி தொடர்ந்து நீடிக்கும் என்பதே அதன் விலையாகும். துப்பாக்கியைக் காட்டி செக்கோஸ்லவாகியாவை தமது செல்வாக்கின் கீழ் வைத்துக்கொள்வதுதான் ரஷியர்கள் இப்போது அங்குசெய்துகொண்டிருக்கும் வேலையாகும்.

### கூட்டறிக்கை விபரம்

செக்கோஸ்லவேகியாவில் சகஜ நிலைமை திரும்பியவுடன் ரஷியத் துருப்புகள் வாபசாகும் என்று விரிவாக விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறது. சோவியத்-செக். கூட்டறிக்கையில் நான் ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. இதில் இம் மாதிரிப் பிரஸ்தாபம் எதையும் காணேன். "ஐந்து சோஷலிஸ்ட நாடுகளின் துருப்புகள் தற்காலிகமாக செக்கோஸ்லாவியாவுக்குள் பிரவேசித்தது" பற்றி முதல் பந்தியில் கூறப்பட்டிருக்கிறது. நாலாவது ஒரிடத்தில் ...

1968 ஆகஸ்ட் 27-ம் திகதி வெளியிடப்பட்டது ... செய்துகொள்ளப்பட்ட சோவியத்-செக். ஒப்பந்தம், 1936 ஜூலை மாதத்தில் ஏற்பட்ட ஆஸ்டிரியா—ஜெர்மனி ஒப்பந்தத்தை எனக்கு நினைவூட்டுகிறதென்று வியன்னாவிலுள்ள அன்னிய ராஜதந்திரி ஒருவர் என்னிடம் கூறினார். அந்த ஒப்பந்தத்தில் ஆஸ்டிரியாவின் சுதந்திரத்தை ஹிட்லர் ஏற்றுக்கொண்டிருந்தார். அவர்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லையென்றும் ஒப்புக்கொண்டிருந்தார். ஆயினும் சில நாஸி ஆதரவு மந்திரிகளை ஆஸ்டிரியா நியமிக்கவேண்டியிருந்தது. தேசிய சோஷலிஸ்டுகளைக் (நாஸிகளை) குறைகூறுவதில்லையென்றும் அவர்களை இஷ்டம்போல் விடுவதாகவும் ஆஸ்டிரியா ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. 1938 பெப்ரவரியில் ஆஸ்டிரியாவுக்குள் ஹிட்லர் புகுந்தார் செக்கோஸ்லவாக்கியாவில் என்ன நடக்கும்?

### பிளவுக்கு முயற்சி

மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்படுத்தான் தீரும். இப்போது செய்துகொள்ளப்பட்டுள்ள சமரசம் சரியாக வேலை செய்ய முடியாது என்பது நிச்சயம். பிரித்தாளுவதுஎன்றபழைய ஏகாதிபத்தியக் கொள்கையைப் பின்பற்றி, ஸ்லவேக் மக்களுக்கும். செக். மக்களுக்குமிடையே பிளவை உண்டாக்க ரஷ்யர்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிருர்கள். ஆகஸ்டு மாத இறுதியில் பிராக்கில் நடைபெற்ற செக். கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாடு சட்டவிரோதமானதென்று அவர்கள் பிடிவாதம் செய்கிருர்கள். மொத்தம் 200 ஸ்லவேக் மெம்பர்களில் 50 பேர் தான் அந்த ஆகஸ்டு மகாநாட்டுக்கு வர முடிந்ததென்றும், ஆகையால் புதிதாக வேறொரு மகாநாடு நடாத்தவேண்டுமென்றும் ரஷ்யர்கள் கேட்கிருர்கள அந்த மகாநாட்டு செக்கைக் கவிழ்த்து விடும்படி ஸ்லவேக் மெம்பர்களை தூண்டப்படலாம்

### தீராத வியாதி

ரஷ்யர்களின்பீரங்கிகளுக்கு பலியாகி உயிரைவிட்ட செக்கோஸ்லவாக்கியர்களைப் பார்த்தபோது ...

[11-ம் பக்கத் தொடர்ச்சி] ... அக்கோவிலில் வித... மண்டபம் கட்ட, ... வெள்ளைக்கார பக்தர் ... 7500 கொடுக்கமுன்... துள்ளதாயும், அங்கு ... நந்தவனத்தையும் அமை... அவரே வேண்டிய ஏற்ப... களைச் செய்வதாகவு... அறிந்தேன். சிங்கள... களை மட்டுமன்றி வெள்... காரர்களையும் அந்த ... கள் ஆட்கொண்டு ... வென்ன திருவிளையா... கமெல்லாம் செய்கிருர்!

பங்களாக்கழகத்தி... இந்து மாணவர்கள் ஆ... கூடம், மண்டபம், ... திடம். பூகோளம் முத... வற்றுக்குச் செலுத்திய... 'டிப்பாஸிட்' ... வெள்ளை ... வருட... யும்போது தாங்கள் திரு... வாங்காமல் இதை... லாம் முருகன் கோவிலுக்... கொடுத்துவிடத் தீர்மா... திருப்பதாயும் இதில் மு... பிரம் ரூபாய்க்கு ... கோவிலுக்குச் சேரும... றும் தெரிகிறது.

இக் கோயிலுக்கு ஸ்ரீ புருஷதேவர் சமீபத்... சென்றிருக்கைவி... தாம் எதைப்பற்றி... பெருமைப் படுவதி... வென்றும், ஆனால் கோவிலின் அமைப்பை... அழகிய சூழ்நிலையை... கண்டு பெருமைப்ப... தாகவும் சொன்னா... இப் புதிய படைவீடு ... சனத்துக்குஇனிதமிழகத்... இருந்தும் அதிகம் யாத்... கர் வருவதாயின் அ... வியப்பில்லை. சதிர்கா... காவலுகள் இங்கே ஆரம்பித்துவிட்டதாம்.

ஃ ஃ ஃ

மூலநோய் தீர்க்கும் மு... வன் கண்டாய் முத்தமி... நான்மறையும் ஆனான் ... டாய், ஆலின்கீழ் நாலவ... அறத்தான் கண்டாய், ... யும் அந்தமுமானான் ... டாய், பாவவிருத்... மானான் கண்டாய் பவ... கடலரையே போலவ... கண்டாய், ... கொன்றை மலித்தான் ... டாய் மறைக்காட்டு... யும் மணாளன் தானே.

— அப்பர் சுவாமி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டி கொலைமுயற்சி வழக்கு: இன்று தீர்ப்பு

## 5-ம் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள் வல்வெட்டிக் கொலை முயற்சி வழக்குத் தீர்ப்பு இன்று காலை வழங்கப்படும். நீதிபதி இன்று காலை உரைநிகழ்த்தியபின், ஜூரி சபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்த பின் தங்கள் முடிவைத் தெரிவிப்பார்கள். இதைத் தொடர்ந்து நீதிபதி தீர்ப்பளிப்பார்.

வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதிபதி திரு. ஓ. எல். டி கிரெட்சர் முன்னிலையில் நேற்றுக் காலை இரண்டாவது தினமாக இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

1, 2, 3ம் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் சரிபிமும், 4, 5ம் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதனும், முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசாவும் நேற்றுக் காலை தொகுப்புரை நிகழ்த்தினர்கள்.

விசாரணை நடுவில் 5ம் எதிரியான த. ஜெயராசாவுக்கு எதிராகச் சாட்சியங்கள் இல்லாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் 1967ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ந் தேதி, வல்வெட்டியில் சி. தம்பிமுத்து, நா. நடராசா, பொ. பொன்னம்பலம், ஆ. பொன்னுத்துரை, த. ஜெயராசா ஆகியோர், இராமலிங்கம் இன்னராசாவைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் இராமலிங்கம் பெண் செல்லமாணிக்கத்தைப் பொல்லால் தாக்கி காயம் விளைவித்ததாகவும், அதே நேரத்தில் சின்னக்குட்டி இராமலிங்கத்தை உலக்கையால் தாக்கி காயம் விளைவித்ததாகவும், அதே நேரத்தில் சின்னக்குட்டி இராமலிங்கத்தைக் கத்தியால் வெட்டிச் சிறு காயம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

[இன்றைய 'ஈழநாடு' பிந்திய பதிப்பில் வல்வெட்டிக் கொலைமுயற்சி வழக்குத் தீர்ப்பு வெளிவரும்.]

# வல்வெட்டித்துறை சம்பவம் பற்றி எம். பி.

## அரசாங்கம் கவனம் செலுத்த கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு வல்வெட்டித்துறை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பந்தமாக அட்டோர்னி ஜெனரல் கொடுத்த தீர்ப்பு மக்களுக்கு திருப்தியளிக்கவில்லையென்றும் இதுபற்றி அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்றும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினர்.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்த அமுல் பற்றி திரு. நவரத்தினம் குறிப்பிடுகையில், பிரஜாவுரிமை மனுச் செய்வதற்கு சமாதான நீதவானின் கையொப்பம் தேவைப்படுகிறதென்றும் இதை நிவர்த்தி செய்வதற்கு தற்காலிகமாக தொழிற்சங்க உத்தியோகத்தர்களை சமாதான நீதவான்களாக நியமிக்கலாமென்றும் அவர் யோசனை சொன்னார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகியவைகளுக்கென புதிய கட்டிடங்கள் அமைக்கப்படவேண்டுமென்றும் திரு. நவரத்தினம் கூறினர்.

ஓய்வுபெற்ற

# ஆங்கில ஆசிரியர்களுக்கு மீண்டும்கற்பிக்கஒருசந்தர்ப்பம்

கொழும்பு, ஞாயிறு ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு கல்லூரிகளில் ஆங்கிலம் போதிப்பதற்காக திரும்பவும் ஆசிரியர் பதவி வழங்குவதற்காக ஒரு திட்டத்தை கல்வி இலாகா வகுத்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் 2712 ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுவதாகக் கல்வி இலாகா தெரிவித்துள்ளது. ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காரணமாகவே கல்வி இலாகா இத்திட்டத்தை வகுத்துள்ளது.

புதிதாக சேவையில் அமர்த்தப்படும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பென்சனுடன் குறிப்பிட்ட அலவன்சும் வழங்கப்படுமென்றும் தெரியவருகிறது.

## சேவை நலம் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள் "தமது நாற்பதாண்டு ஆசிரியப் பணியில் தன்னலமற்ற சேவை மனப்பான்மையும், நீதியும் நேர்மையும் ஒருங்கே அமையப் பெற்றவர் பண்டிதர் சி. இராசையா. நாவலர் பாடசாலைத் தலைவராயிருந்து பாடசாலை உயர்ச்சிபெற அயராது உழைத்து யாவரதும் நன் மதிப்பையும் பெற்றவர்" என்று வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்து உம்மாத்துடன் ஓய்வுபெற்ற பண்டிதர் இராசையாவுக்கும், தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்று இங்கிருந்து வேறு பாடசாலைக்கு சென்ற ஆசிரியர் திரு க. தர்மலிங்கத்திற்கும் பாராட்டு தெரிவிப்பதற்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசிய புதிய அதிபர் திரு. நா. வேற்பிள்ளை குறிப்பிட்டார்.

சிரேஷ்ட உதவியாசிரியர் திரு குலத்துங்கம், திரு. சி. கார்த்திகேசு, திரு. கா. கிருஷ்ணசாமி ஐயர், திருமதி ம. சண்முகரத்தினம், ம. பா. செபஸ்தியாம்பிள்ளை ஆசிரியர் இவ்விருவர்களினதும் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

இருவருக்கும் பாராட்டுப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. ஆசிரியர் திரு. இ. பொன்னையா நன்றி கூறினர்.

[ந நி]

ஐயமங்கள் குழப்பம்

# மோதலுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை

## உதவிமந்திரி கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு மஹியங்கனையில் விவசாயப் படைக்கும், பொலிசாருக்குமிடையில் நடந்த மோதலுக்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று விவசாயப்படைத் தலைவரும், உதவி மந்திரியுமான காப்டன் செனிவரத்தின தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடைபெற்ற போது தான் வீட்டிலிருந்ததாகவும், உடனடியாக அவ்விடத்துக்குச் சென்று அமைதியை நிலைநாட்டியதாகவும், தான் சென்ற 5 நிமிடங்களுக்குள் குழப்பங்கள் நிறுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த இடத்திற்கு விசாரணை செய்யச் சென்ற பொலிஸ் அதிகாரி திரு ஏ. சி. டெட் இன்று கொழும்பு வந்துசேர்ந்தார். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு இவர், விபரமாக ஓர் அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கிறார்.

ஆனைக்கோட்டை

# மூத்தநயினர் கோயிலிலும் ஹரிஜனர்க்கு தடையில்லை

யாழ்ப்பாணம், திங்கள் ஒரு சிறு பிரச்சினை இந்துக்களிடையே ஒற்றுமைக் குறைவினைப் பெருந்தலையிடியாய் விட்டதெனத் தம்மைக் காணச்சென்ற ஆலயப்பிரவேசக் குழுப்பிரதிநிதிகளிடம் ஆனைக்கோட்டை மூத்தநயினர் கோவில் மனேஜர் நேற்றுக் கூறினர்.

திரு. கே. முத்துவேற்பிள்ளை, டாக்டர் வி. ரி. பசுபதி, டாக்டர் கே. கனகரத்தினம் திரு. எம். வைரமுத்து, திரு. எஸ். அம்பிகைபாகன் ஆகியோர் ஆலயப் பிரவேசக்குழுவின் சார்பாக மேற்படி கோவில் மனேஜர் திரு. சி. முத்துக்குமாருவைச் சந்தித்த பொழுது இந்துக்களின் ஒற்றுமையின்மையே அவசியமற்ற கலவரங்களுக்குக் காரணமாயிருந்தது என்றுவருத்தத்துடன் தெரிவித்தார். மாறிக்கொண்டுவரும்சமூகப்பழக்கவழக்கங்கள் காரணமாக கோவில்களுக்குள் செல்வோர்களின் கட்டுப்பாடுகளிலும் மாற்றங்கள் தேவைப்படுவது இயற்கை. அவற்றைத் தடுக்க முயல்வது நியாயமானதல்ல என்றுகூறி மூத்தநயினர் கோவிலைப் பொறுத்தவரையில் சாதி பேதமின்றி ஆசாரமாக வழிபாட்டிற்கு வரும் எல்லா இந்துக்களுக்கும் திறந்துவிடப்படும் என்று அவர் உறுதி கூறினர்.

# கூட்டுத்தாபனங்களில் தமிழ் புறக்கணிப்பு

## பண்டிதர் ரத்தினம் கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள் தமிழ்மொழியைப் புறக்கணிப்பது தமிழ் இனத்திற்கு செய்யும் அநியாயம். கூட்டுத்தாபனங்கள் தமிழைப் புறக்கணிப்பது இது முதல் தடவையல்ல. எல்லாக் கூட்டுத்தாபனங்களும் தமிழ்மொழியைப் புறக்கணித்து வருவது வருந்தப்படக்கூடிய விஷயம்.

அச்சுவேலியில் திறக்கப்படும் ஓட்டுப் பலகைத் தொழிற்சாலையின் 2-ம் பகுதி அடிக்கல் நாட்டுவிழா அழைப்பிதழில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து கைத்தொழில் மந்திரிக்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அச்சுவேலியில் திறக்கப்படும் 2வது பகுதி ஓட்டுப் பலகைத் தொழிற்சாலையில் பதிக்கப்படும் கல்வெட்டிலும் தமிழ்மொழி இடம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிளிநொச்சி எம். பி., சிங்களமொழியிலுள்ள அழைப்பிதழையும் கடிதத்துடன் மந்திரிக்கு அனுப்பியுள்ளார்.

---

# புனிதநகர் பற்றி ஆராயும் குழு

திருகோணமலை, ஞாயிறு ஈழநாட்டில் தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புனித நகர் பிரகடன விடயத்தை ஆராய்ந்து முடிவு செய்வதற்கென அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவினர் விரைவில் திருகோணமலைக்கு வரவிருக்கின்றனர். மேற்படி ஆலய புனித நகர் பிரகடனம் பற்றி ஆராயவும் பொதுவான அபிப்பிராயங்களை பெறவும் வரும்போது இங்குள்ள சகல மன்றங்களும் ஸ்தாபனங்களும் சழகங்களும் தத்தம் சார்பில் புனித நகர் அமைப்புத் திட்டம் பற்றிய அறிக்கையொன்றினை திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பும்படி திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபையின் கௌரவ தலைவர் டாக்டர் க. அ. சித்திரவேலு கோரியுள்ளார்.

# நல்லூர் இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர் கல்வைராசிகராசி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றுவரும் யாழ்ப்பாணம் இசைத்தமிழ் மன்றத்தின் இசைவிழாவின் 4-ம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்கு அ. இ. இசைச்சங்கத் தலைவர் திரு எஸ். செல்லநாயகம் தலைமையில் நிகழும்.

6.00—7.00 செல்வி இராஜதேவி சுவாமிநாதபிள்ளை பாட்டு, 7-00—7-45 திரு கே. வி. எஸ். சண்முகநாதன் பாட்டு. 8-00—9-00 திரு ம. முத்துக்குமாரசாமி பாட்டு. 9-00—10-00 திரு [illegible] குழு. 10-00—11-00 திரு [illegible] பாட்டு.

# ஐயாறன் எழுதுவது

ஒரு கோவில் குருக்களை மாதம் ரூபா 250 கொடுத்து வைத்திருக்கிறார்கள். அதைத் தவிர அர்ச்சனை காசெல்லாம் அவருக்குத்தானாம். குடியிருக்க வீடும், தனி வாகனமும் இலவசம். இப்படி இலங்கையிலே ஒரு கோவிலில் கொடுக்கிறார்களென்றால் நம்புவீர்களா?

பேராதனையிலே காந்த மலையில் புதிதாகக் கட்டிய முருகன் கோவிலில் இவ்விதம் குருக்களுக்குத் தருவதாக அறிந்ததும் மிக மகிழ்ச்சியாக இருந்தது. அக் குருக்கள் யார் தெரியுமா?

ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சிவஸ்ரீ ப. தியாகராஜக்குருக்கள் சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவராம். சிங்களவர் அதிகமாக கோவிலுக்கு வருவதால் அவர்களுடன் சிங்களம் பேசவேண்டியுள்ளது. பல்கலைக்கழக தலைவேந்தர், பேராசிரியர் முதலியவர்களும் வெளிநாட்டவரும் வருவதால் அவர்களுடன் கதைக்க ஆங்கிலம் பயன்படுகிறது. குருக்களை கோவிலின் சம்பள அடிமைகளாக கருதாமல், அவரும் கவலையின்றி வாழக்கூடியவிதத்தில் மதிப்பும் அளிப்பதானால், படித்த பண்பாளர்களும் ஆர்வத்துடன் இந்தப் பணிசெய்ய முன்வருவார்கள் தானே.

சில வாரங்களுக்கு முன் ஒரு குருக்கள் வீட்டுத் தாயுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவரது பிள்ளை ஆங்கிலம் படிக்கிறார். என்ன படித்தாலும் கோவில் பூசையை விடக்கூடாதென்றும், குருக்களுக்கு மாதம் ரூபா 300 சம்பளம் கிடைக்கக்கூடிய காலம் வருமென்றும் சொன்னேன்.

"மாதம் முன்னூறு! குருக்களுக்கா!" என்று அந்தத் தாய் வியப்புடன் கேட்டு, "அந்தக் காலமும் வருமா?" என்றார். அந்தக் காலமும் இப்போதே வந்துவிட்டதென்பதை பேராதனை முருகன் கருணையுடன் காட்டிவிட்டார். முப்போதும் திருமேனி தீண்டி, கோவிலின் பக்கத்திலேயே இரவு பகலாக குடும்பத்துடன் வாழ்ந்து பூசைசெய்யும் வணக்கத்துக்குரிய குருக்களுக்கு இக் காலத்தில் இந்தச் சம்பளம் அதிகமாகுமா?

ஃ ஃ ஃ

அடுத்த மாதம் அங்கு புதிதாக வரும் மாணவர்களை "ராகிங்" செய்யப் போவதில்லையாம். அவர்களை மூத்த மாணவர்கள் முருகன் கோவிலுக்கு அழைத்துச் சென்று, அவர்களுடன் சேர்ந்து சிரமதானஞ்செய்து பூமியை மட்டப்படுத்துவதுடன், விசேஷபூசை நடத்தி பிரசாதங்களை அன்னதானமாக அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும் கேள்விப்பட்டேன். இவ்விதம் தீர்மானித்துள்ள பல்கலைக்கழக இந்து மாணவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் மற்ற மாணவர்கள் 'ராகிங்' தொடரவு செய்யலாம். இதை எப்படித் தடுப்பது?

ஃ ஃ ஃ

இக்கோவில்முருகன் உணவு உற்பத்தியாலும் ஈடுபடப் போவதாகத் தெரிகிறது. அக்கராயன் குளப்பகுதியில் இக் கோவிலுக்காக 50 ஏக்கர் நெற்காணி இடைக்க இருப்பதாயும் அங்கு உற்பத்திசெய்யும் நெல் இக் கோவிலில் பிரசாதத்துக்கும் அன்னதானங்களுக்கும் பயன்படலாமென்றும் தெரிகிறது.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று டிராக்டர் பயிற்சி

வட்டுக்கோட்டை, ஞாயிறு

குறைந்த நிலப்பரப்பில் விவசாயஞ் செய்பவர்களும் சொந்தமாக பெறக்கூடியதாக குறைந்த விலையில் சிறிய உழவு யந்திரங்கள் ஜப்பான் தேசத்திலிருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த யந்திரத்தை இயக்கும் பயிற்சியொன்று இம்மாதம் 9-ம் திகதி காலை வட்டுக்கோட்டை வயல்வெளியில் நடைபெறுவதற்கு வலி மேற்குக் காரியாதிகாரி திரு மாணிக்க நடராசா ஒழுங்குகள் செய்துள்ளார்.

## இரும்புப்பெட்டி வேண்டுமாம்

சுழிபுரம், ஞாயிறு

பண்ணாகம் உபதபாற் கந்தோரில் இரும்புப்பெட்டியொன்றின் அவசியம்பற்றி விளக்கி அதனை உடனடியாகத் தந்துதவுமாறு வட பகுதித் தபால் அதிபரை பிரஸ்தாப உபதபால் கந்தோர் அதிபர் கேட்டுள்ளார்.

## இன்றைய பலன்

(9-9-68)
ஆவணி மீ 24 உ
திங்கட்கிழமை

திதி- திருதியை பி. இ. 5-20 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம் - ரேவதி.

ராகுகாலம்- 7-34 — 9-04.

சுபநேரம் 12-04— 1-34.

இன்று பிறந்தவர்களுக்கு — பணநிறைவான ஆண்டு. குடும்பத்தில் அமைதியும். இனசன மகிழ்ச்சியும் உண்டு. புத்திரர்களால் புகழ் கிடைக்கும். பெண்களாயின் பிரசவகாலத்தில் கவனமாக இருக்கவும். தொழில் துறையில் செல்வாக்குப் பெருகும். ஓவியர்களுக்கு ஒளிமயமான காலம். இயந்திரத் தொழில் புரிவோர் மிகவும் நிதானமாக இருக்கவும். சிலருக்கு அதிர்ஷ்டதேவதையின் அணைப்பும் கிடைக்கலாம். வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமளியாவண்ணம் உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும்.

மேஷம்- வார்த்தை ஜாலம், வசீகரப் பார்வை.
ரிஷபம்- மோசடி நடக்கும் விழிப்புடன் இரு.
மிதுனம்- அறிவுத் தாகம், ஆக்கப்பணி.
கடகம்- இறையருள் கிடைக்கும், இன்பமும் நிலவும்.
சிம்மம்- பக்கத்திலே படுகுழி உஷாராகவிரு.
கன்னி- தாம்பத்தியம் சிறக்கும், தனமும்சேரும்.
துலாம்- [illegible] பொருள் சொல்லாது போகும்.
விருச்சிகம்- பிதாவழிப் பெருமை, பிறந்தக அழைப்பு.
தனுசு- குணமும் பணமும் சேரும், இனமும் வாழ்த்தும்.
மகரம்- புதுப்பொருள் வரவு, புதினம் கேட்பீர்.
கும்பம்- எண்ணத்தில் தடை, கலகம் அதிகம்.
மீனம்- மின்னுவதெல்லாம் பொன்னல்ல, நிதானம் நன்று.

சோதிடக்கலாநிதி
திருமதி வேலுப்பிள்ளை

# யதார்த்த வாதிகளுக்கு கல்வி அமைச்சர் சூடு

## இலங்கையின் இலக்கிய பாரம்பரியம்பற்றி பெருமிதம்

கண்டி, ஞாயிறு

"இன்றைய பட்டதாரிகள் பீற்றிக்கொள்ளும் யதார்த்த படைப்புகள் தோன்றுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே நம் நாடு தனக்கெனக் கல்வி அமைப்பையும் இலக்கிய பாரம்பரியத்தையும் கொண்டு விளங்கியது. இந்த அர்த்தமற்ற விஷயங்களெல்லாம் அந்தக் கல்வி அமைப்புக்கும் இலக்கியங்களுக்கும் அப்பாற்பட்டவை."

கண்டியிலுள்ள பொலகொல்ல ஆசிரிய கலாசாலையில், கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

நான்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்களைக் கொண்ட கட்டத்தில் கல்விமந்திரி மேலும் கூறியதாவது: ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும் கேலி செய்யும் பழக்கம் தலைதூக்கியுள்ளது.

தேசத்தின் வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய ஆசிரியர்களே, இந்த முறையில் நடந்துகொண்டார்களேயானால் ஒரு நல்ல சமுதாயத்தை எப்படி உருவாக்க முடியும். சிறிதுநேர திருப்தியைப் பெறும்பொருட்டு, சிலர்களைக் கிழித்தும் மற்றும் பல விதத்திலும் சக மாணவர்களைக் கேலிசெய்வதை ஆசிரியர்களே செய்வதால் நமது சமுதாயத்தின் தலைவிதி என்னாகும்.

கலைஞர்களுக்கு

## ஆதரவு தேவை

வெள்ளவத்தை, ஞாயிறு

"சமூகத்தில் கலைஞர்கள் நல்ல நாடகங்களைப் படைத்துத் தமிழ் நாடகத் துறையில் வளர்ச்சி காண்பதற்குப் பொதுமக்களும் பத்திரிகைகளும் தமது முழு ஆதரவையும் நல்கவேண்டும். கொழும்பில் வேலை பார்க்கும் கலைஞர்கள் தமது ஓய்வுநேரத்தை நாடகம் நடிப்பதில் போக்குகிறார்கள். இவர்களுடைய கலையுணர்ச்சிக்கு நாம் கடமைப்படவேண்டும்."

இவ்வாறு வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் 'சாவதி-பரமசிவம்' நாடகத்தை மேடையேற்றிப் பேசிய அதன் டைரக்டரும் நடிகருமான திரு கி. ராஜகோபால் கூறினார். அவர் மேலும் பேசுகையில் வெகு விரைவில் கொழும்பில் நல்லதொரு தமிழ் நாடக விழாவை நடாத்தவிருப்பதாகத் தெரிவித்தார்.

## பலநோக்கு சங்க நிர்வாகிகள்

திருக்கோணமலை, ஞாயிறு

தம்பலகாமம் தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. கோணமலை, உப-தலைவர்: திரு. பி. ஏ. பேச்சிமுத்து, செயலாளர்: எம். கே. செல்வராசா, உபசெயலாளர்: எஸ். தம்பிஐயா. கமிட்டி அங்கத்தவர்கள்: எஸ். கனகரத்தினம், கே. ஆறுமுகம், ஆர். சுப்பிரமணியம், கே. வேலாயுதம்.

## குன்றக்குடியாரின் திருமலை விஜயம்

திருக்கோணமலை, ஞாயிறு

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 45வது குருமகாசந்நிதானம் குன்றக்குடி அடிகளார் இம்மாதம் 30ந் தேதி இலங்கைக்கு வருகிறார். இலங்கையில் மலைநாட்டுக்கும், கொழும்புக்கும் சென்றுவிட்டு அக்டோபர் மாதம் 12, 13, 14ந் தேதிகளில் திருக்கோணமலைக்கு வருகைதருவார். திருக்கோணமலை இளைஞர் அருள் நெறிமன்றத்தின் திருமுறை விழாக் கொண்டாட்டத்தில் பங்குபற்றுவதற்காக அடிகளார் மன்றத்தின் அழைப்பின் பேரிலேயே இலங்கை வருகிறாரென்று தெரிகின்றது. திருக்கோணமலை முத்துக்குமாரசுவாமி கோவில் மேற்கு வீதியில் அமைந்த அநபாயசோழன் அரங்கில் திருமுறைவிழா அக்டோபர் மாதம் 12, 13, 14ந் தேதிகளில் கொண்டாடப்படவிருக்கின்றது.

## பாரதி விழா

வெள்ளவத்தை, ஞாயிறு

இலங்கை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினரின் பாரதி விழா, இம்மாதம் 14ந் திகதி மாலை 5 மணிக்கு வம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரதம நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜனாப் சுக்கிரி, திரு. எம். ஏ. காசிலிங்கம் ஆகியோருட்பட பலர் பேசுவர். இலங்கை வானொலி தமிழ்த் துறை அதிகாரி திரு. கே. எஸ். நடராசா தலைமையில் கவியரங்கம் நடைபெறும்.

## "ரயில் கடவைகளில் 'கேற்' போடுங்"

யாழ்ப்பாணம், திங்கள்

ரயில் கடவைகளில் 'கேற்' இல்லாத காரணத்தால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை விளக்கியும், இவ்விதம் ரயில் கடவைகளில் ஏற்பட்டுள்ள உயிர்ப்பலிகள் பற்றியும் விளக்கி இலங்கைப் புகையிரதப் பகுதிக்கும், போக்குவரத்து மந்திரிக்கும் எழுதியுள்ள கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. ஏ. பொ. இரத்தினம் பரந்தன், கிளிநொச்சி, கரடிப்போக்கு ஆகிய இடங்களிலுள்ள முக்கிய றோட்டுகளிலிருக்கும் ரயில் கடவைகளில் 'கேற்'றுகள் போட்டு உதவும்படி மேற்படி கடிதத்தில் கோரியுள்ளார். (ந. நி.)

## வெள்ளிவிழாவும் தமிழ் விழாவும்

குரும்பசிட்டி, ஞாயிறு

இம் மாதம் 19,20,21-ம் திகதிகளில் புத்தூர் மத்திய சனசமூக நிலையத்தினர் தமது 25-ம் ஆண்டு நிறைவினையொட்டி தமிழ் விழாவொன்றினை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளனர். வெள்ளிவிழாவும் தமிழ் விழாவும் என நடத்தப்படவிருக்கும் இவ் வைபவத்தில் தென்னிந்திய தமிழறிஞர்கள் இருவர் கலந்துகொள்வர் என அறிவிக்கப்படுகின்றது. தமிழ்விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது.

ஊர்காவற்றுறை பட்டினசபை

## வட்டாரங்களை விஸ்தரிக்க கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"ஐந்து வட்டாரங்களைக் கொண்ட ஊர்காவற்றுறைப் பட்டினசபையின் வட்டாரங்களை ஏழு வட்டாரங்களாகப் பிரிக்கவேண்டும்."

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை ஊர்காவற்றுறைப் பட்டினசபை நிறைவேற்றியுள்ளது.

ஊர்காவற்றுறைப் பட்டின வட்டாரங்களை அடுத்து இருக்கும் கரம்பன் இரு வட்டாரங்களை நாரந்தனை கிராமசபையிலிருந்து பிரித்து ஏழு வட்டாரங்களாக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

நயினாதீவில் நடைபெற்ற வள்ள விபத்தைப் பற்றி விசாரணை செய்யுமாறு உள்நாட்டு அமைச்சரையும், யாழ்ப்பாண அரசாங்க அதிபரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

சிங்கப்பூர் 'ஸ்காலர்ஷிப்'

# திரிசங்குசுவர்க்கத்தில் மாணவர்கள்

வெள்ளவத்தை, ஞாயிறு

கொழும்புத் திட்டத்தின் கீழ் சிங்கப்பூரில் ஸ்காலர்ஷிப் மூலம் பொறியியல், தொழில்நுட்பம் முதலிய துறைகளில் பயிற்சிபெறுவதற்காக இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்து பல மாதங்களாகியும் இன்னும் இவர்களைச் சிங்கப்பூர் அரசாங்கம் அழைக்காமல் இருக்கிறது. சிங்கப்பூர் ஸ்காலர்ஷிப்பை நம்பி இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்காமல் பல மாணவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். முன்னரும் பல தடவைகள் கல்வியமைச்சில் இது போலவே ஸ்காலர்ஷிப்புக்கு நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்களென்றும் பின்னர் அதைப் பற்றி மூச்சே இல்லையென்றும் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

இதுசம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்கும்படி கல்வியமைச்சை யாழ். கனிட்ட தொழில் நுட்பக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கேட்டுக்கொள்ளவிருக்கிறது.

## எம்.பி.க்கு நன்றி

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரி-குஞ்சுப்பிட்டிக் கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும்போது வேண்டிய நடவடிக்கை எடுத்து மக்களின் குறையை நிவர்த்தி செய்த கிளிநொச்சி எம். பி. திரு. ஏ. பொ. இரத்தினத்தைப் பாராட்டி பூநகரி சக்தி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. கே. தனபாலசிங்கம் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். (ந. நி.)

## 'மீன்பிடி துறைமுகம் வேண்டும்'

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"நயினாதீவு - வடக்கு வடிதுறைமுகத்தை மீன் பிடித் தொழிலாளர்களின் முன்னேற்றம் கருதி ஒரு மீன்பிடித்துறைமுகமாக அமைத்துத்தரவேண்டும்".

இவ்வாறு அரசினரைக் கோரும் தீர்மானத்தை நயினாதீவுக் கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

## சங்காபிஷேகம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவு - கண்ணகை அம்மன் என அழைக்கப்படும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இம்மாதம் 10-ந் திகதி சங்காபிஷேகம் நடைபெறும்.

மகா கும்பாபிஷேகத்தினத்தையொட்டி நடைபெறும் சங்காபிஷேகதினத்தன்று ஆலய பரிபாலன சபை மகா சபைக் கூட்டமும் நடைபெறும் எனத் தெரிகின்றது.

பூநகரி

## பஸ் சேவையை சீர்திருத்துக

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரியில் நடைபெற்று வரும் இ. போ. ச. பஸ் சேவை மோசமான நிலையில் இருப்பதாகவும் இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுத்து மக்களின் குறையைப் போக்குமாறும் வடமாகாண இ. போ. ச. முகாமையாளரையும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தையும் பூநகரி கிராமசபை 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. கே. தனபாலசிங்கம் கேட்டுள்ளார். (ந. நி.)

## இவர்கள் மின்சாரம் பெறுவர்

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டைக்கிராம சபையின் ஓர் பகுதி விரைவில் ஒளிபெறவிருக்கின்றது. மின்சார இணைப்பு வேலைகள் யாவும் இங்கு பூர்த்தியாகும் நிலையிலுள்ளது. அநேகமாக இம்மாதப் பிற்பகுதியில் இப் பகுதி மக்கள் மின்சாரம் பெறுவர் என நம்பப்படுகிறது.

ஆகஸ்டில்

## 513 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை

கொழும்பு, ஞாயிறு

ஆகஸ்ட் மாதத்தில் 513 இந்திய இனத்தவருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான 1964 அக்டோபர் மாதம் 30-ம் திகதியிலிருந்து இதுவரை 24,402 பேர் இந்திய பிரஜாவுரிமை பெற்றுள்ளனர்.

## எஸ். எஸ். ஆர். வருகிறார்.

குரும்பசிட்டி ஞாயிறு

தென்னிந்திய சினிமா நடிகர் திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் புத்தூர் சனசமூக நிலையத்தினரின் தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்காக இம்மாதம் 19-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார், என்று விழா அமைப்பாளர் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழாராய்ச்சி சைவ அறிஞர்கள் முன்வரவேண்டும்"

திருமலை, ஞாயிறு

"திருக்கோணேஸ்வராலயத்துடன் எந்தெந்தப் பகுதிகளைச் சேர்த்துப் புனித நகராகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்பது குறித்து இலங்கையில் உள்ள தமிழாராய்ச்சி சைவ அறிஞர்கள் முன்வந்து தங்கள் சரித்திர ஆதார பூர்வமாக ஏகோபித்த கருத்துக்களை விசாரணைக் கமிட்டியிடம் தெரிவிக்கவேண்டும்."

இவ்வாறு திருக்கோணேஸ்வரால பரிபாலன சபைத் தலைவர் வைத்திய கலாநிதி கே. எஸ். சித்திரவேலு "ஈழநாடு" நிருபரிடம் கூறினார்.

பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கோணேஸ்வர ஆலயப் புனருத்தாரணம் செய்யப்பட்ட பின்னர் நடைபெற்ற பரிபாலனசபை தெரிவுக் கூட்டத்தில் டாக்டர் சித்திரவேலு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து கோணேஸ்வரர் ஆலயத்துக்கான தொண்டுகளை அவர் முன்னின்று ஆற்றி வருகிறார்.

இலங்கையிலே பாடல் பெற்ற தலங்களுள் கோணேஸ்வரர் ஆலயத்தையே புனிதப்பிரதேசமாகப் பிரகடனம் செய்யமுன்வந்திருப்பது சமுத்த சைவ மக்களுக்கு பூரிப்பு அளிப்பதாகும். எந்த எந்தப் பகுதிகளைச் சேர்த்து கோணேஸ்வராலயத்தை புனிதப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று கேட்டு புனித பிரதேச விசாரணைக்கமிட்டி பொதுமக்களிடமிருந்து மகஜர்கள் கோரியுள்ளது. இக்கமிட்டி பின்னர் நேர்முக விசாரணைகளையும் நடத்த இருக்கின்றது.

தமிழர்கள் தங்களுக்குக் கிடைப்பன வற்றைத் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு இழந்து வருகின்றார்கள். இதுவே தமிழர்களின் அரசியல் வரலாறு என்பதை காலம் தலைமுறையாக, எடுத்துக்காட்டுகின்றது என்று டாக்டர் சித்திரவேலு கூறினார்.

இந்த நிலையில் கோணேஸ்வராலயத்துடன் பிரடரிக் கோட்டையினுள் இருக்கும் எப்பகுதிகளைச் சேர்த்துப் புனிதப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்பது குறித்து விசாரணைக் கமிட்டியிடம் சைவ தமிழ் பொதுமக்கள், தெரிவிக்கும் கருத்துக்கள் ஆலோசனைகள் ஏகமனதாக இருக்க வேண்டும். கருத்து பேதங்கள் அமைந்துவிடக்கூடாது என்றார் டாக்டர் சித்திரவேல்.

அவிகான் கொலைவழக்கில்

# எதிரிகளைப்பார்க்க வந்தவருக்கு சிறை

திருமலை, ஞாயிறு

பாலகன் அவிகான் கொலைவழக்கு விசாரணையின் போது எதிரிகளைப் பார்த்து விடவேண்டும் என்ற ஆவலில் நிலாவெளிக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் பிஸ்கால் காவலாளிகளுடன் வாக்குவாதப்பட்டு அவர்களைத் தாக்க முற்பட்டாராம். இதனை அறிந்த நீதிபதி திரு. எஸ். பி. குணவர்தன அந்த ஆசாமியை எதிரிகளில் ஒருவருடன் சேர்த்து விலக்கிட்டு 14 நாட்கள் அவர்களுடன் இருந்து நன்றாகப் பார்த்து அனுபவிக்கும்படி உத்தரவிட்டார். 14 நாட்கள் கழித்து அவர் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்ட போது ஒன்றரை மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. நிலாவெளிக்கிராமத்தைச் சேர்ந்த குரூஸ் என்பவரே இத்தண்டனைக்குள்ளானவர்.

## அண்ணாவின்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அண்ணாதுரையை பலர் சென்று பார்த்தனர். இவரது உடல்நிலை சம்பந்தமான வைத்திய அறிக்கைகள் பொதுமக்களுக்காக அடிக்கடி வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

**சிறப்புப்பட்டம்**

அண்ணாமலைப்பல்கலைக்கழகம் இன்று தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரைக்கு இலக்கியச் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவித்தது. இச்சிறப்புப் பட்டம் பாரத ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசெயினுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. அண்ணாதுரையை டாக்டர் கோவிந்தராஜன் இப்போது கவனித்து வருகிறார்.

# எதிரிகள் விடுதலை

குருமன்பிட்டி, ஞாயிறு

சங்கானை கலவர நிலைப்பு வழக்கொன்றின் எதிரிகள் மூவரை, வழக்கு விசாரணை முடிவில், சாட்சியம் முரண்பாடு காரணமாக மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கடந்த வருடம் ஆடி மாதம் 7-ம் திகதி சங்கானை வாசியான பொன்னன் நாகமுத்து என்பவரின் வீட்டுக்கு தீ வைத்து சேதப்படுத்தியதுடன், நாகமுத்துவிற்கு இரும்புக்கம்பியால் காயம் விளைவித்ததாக இராச துரை, செல்வரத்தினம், சங்கரப்பிள்ளை ஆகியோர் மீது சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்டுள்ள இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

# இராணுவ அதிகாரிகள்

நல்லூர் ஞாயிறு

இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சேபால ஆட்டிகல மற்றும் மூன்று இராணுவ அதிகாரிகளும் கடற்படை அதிகாரிகள் சிலரும் இன்று காலை விசேஷ விமானத்தில் [illegible]க்கு விஜயம் செய்தனர்.

சட்ட விரோதக் குடியேற்றத் தடுப்பு, கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி இவர்கள் ஆராய்ந்தனர்.

## பொலிஸில் புகார்

அளவெட்டி ஞாயிறு

விவாகமாகாத தனது மகளைக் காணவில்லை என ஒரு தாயார் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இரத்தினாமணி கண்ணம்மா பொலிஸில் செய்து கொண்ட புகாரில் கூறியிருப்பதாவது:

எனது மணமாகாத மகளை (18 வயது) எனது மூத்த மகள் வீட்டில் தங்கியிருக்கச் செய்தேன். அவர் என்வீட்டுக்கு போவதாகக் கூறிவிட்டு என் வீட்டுக்கு வரவில்லை. தற்போது இதே ஊரைச் சேர்ந்த 4 பிள்ளைகளுக்குத் தந்தை) ஒருவருடன் கூடிவாழ்வதாக அறிகிறேன். ஆகவே அவரை என்னிடம் மீட்டுத் தருக.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## திரும்பி.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாநகரசபை உயர்தர அதிகாரியொருவர் சமீபத்தில் கொழும்புக்குச் சென்று சம்பந்தப்பட்ட அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி திரும்பியதாகவும் துண்டிக்காணியை மாநகரசபையிடம் திருப்பி ஒப்படைப்பதற்கு உத்தரவிடுவதாக தொழில் அமைச்சர் உறுதியளித்ததாகவும் யாழ்ப்பாண மாநகரசபை அதிகாரிஒருவர்நேற்று 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்திருந்தார்.

இச்செய்தியை மறுத்த அரசாங்க அதிபர், துண்டிக்காணி மாநகரசபையிடம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லையென்றும் தொழில் அமைச்சர் காணியை ஒப்படைக்கும்படி உத்தரவிடவில்லையென்றும் தெரிவித்தார்.

# வாள்வெட்டு சம்பவம்

அளவெட்டி ஞாயிறு

ஊரங்குணையில் நடைபெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் கடுமையான காயமடைந்தார். மற்றவருக்கு சிறிய காயமேற்பட்டது. குடும்பத்தகராறே இதற்குக்காரணம் எனக் கூறப்படுகிறது.

கட்டுவனை அடுத்த ஊரங்குணையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் சுப்பையா, திலையம்பலம் என்போர் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் ஒழுங்கையில் வைத்து தாக்கப்பட்டனராம்.

காயங்களுக்குள்ளான இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## குழந்தைகள் கொலை செய்யப்படுகின்றனவாம்

ரியோடிஜெனிரோ, செப். 7

தென் அமெரிக்காவில் உள்ள ரியோடிஜெனிரோ நகரில் அனாதை இல்லம் ஒன்றில் குழந்தைகள் கொலைசெய்யப்பட்டும் இம்சிக்கப்பட்டும், விரும்பத்தகாத காரியங்களுக்குள்ளாக்கப்பட்டும் வருவதாகக் கேட்டுக் கொதித்தெழுந்த ஆயிரக்கணக்கான மக்கள், அந்த விடுதியின் சொந்தக்காரி காவலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ்நிலையத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த அனாதை இல்லத்தில் 47 குழந்தைகள் உள்ளனர். அனேகமாக 12 வயதுக்குட்பட்டவர்கள். தாங்கள் அநேகமாகப் பட்டினிபோடப்பட்டுவருவதாகவும், அடிக்கடி இம்சிக்கப்பட்டுவருவதாகவும், விரும்பத்தகாத காரியங்களுக்கு உட்படுத்தப்படுவதாகவும்இந்தக்குழந்தைகள் கூறுகின்றனர். இந்தக் குழந்தைகளைப் பொலிஸார் பரிசோதித்துப் பார்த்ததில் குழந்தைகள் கூறுவது நிஜம் தானென்று தெரிகிறது. இந்த இல்லத்தை நடத்தி வரும் சொந்தக்காரி கைது செய்யப்பட்டிருக்கிறார். அவளது கணவன் அகப்படவில்லை.

இந்த இல்லத்தில் இரவு வெகு நேரத்துக்குப் பிறகு கூட குழந்தைகள் [illegible] பாடுவதையும், ரேடியோசங்கீதம்உரக்கக் கேட்டதையும் கேட்டு அயலார் பொலிஸில் புகார் செய்தனர்.

பொலிசார் இதனைத் தொடர்ந்து நடத்திய சோதனையில் இத்திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

# ருமேனியாவுக்கு பிரிட்டிஷ் மந்திரி திடீர் விஜயம்

லண்டன், செப். 8

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. மைக்கேல் ஸ்டுவார்ட், கிழக்கு ஐரோப்பிய நாடான ருமேனியாவுக்கு இன்று விமானமூலம் பயணமானார். அவர் ருமேனியாவில் ஐந்து நாட்கள் தங்கியிருப்பார்.

ரஷ்ய, வார்ஸோ நாட்டுத் துருப்புகள் செக்கோஸ்லாவாக்கியாவினுள் பிரவேசித்த பின்னர் ஒரு கிழக்கு ஐரோப்பிய நாட்டுக்கு மேற்கத்திய நாட்டு மந்திரி விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும்.

முன்னதாக, பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரியின் விஜயத் திட்டத்தில், ஹங்கேரியும் பல்கேரியாவும் அடங்கியிருந்தன.

ஆனால், செக்கோஸ்லாவாக்கியாவில் நடைபெற்ற இராணுவக் குறுக்கீட்டில் இந்த இரு நாட்டுத் துருப்புகளும் கலந்து கொண்ட காரணத்தால், பிரிட்டிஷ் மந்திரி இவ்விரு நாடுகளுக்குமான தமது விஜயத்தை ரத்துச் செய்து விட்டார்.

## யூஎன்பி-தீர்மானம்

கொழும்பு ஞாயிறு

அடுத்த பொதுத் தேர்தல் பிரசார வேலைகளை 69-ம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிப்பதென்று ஐக்கியதேசிய கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

கட்சியின் பிரசார வேலைகளில் ஈடுபடும் வாலிபர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடாத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 2 சதம் லாபம்: 4 வாரம் கடூழியம்

காலி, ஞாயிறு

சின்ன வெங்காய விற்பனையில் இரண்டு சதம் லாபமடித்ததாக நான்கு வாரம் கடூழியச் சிறைத்தண்டனையும் 250 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது ஒரு கடைக்காரருக்கு அபராதம் செலுத்தத் தவறினால் மேலும்மூன்றுவாரக்கடூழியச் சிறை அனுபவிக்கவும்உத்தரவிடப்பட்டது. அப்புகலையைச் சேர்ந்த என். ஓ. பீட்டர் என்பவரே இந்தத் தண்டனையைப் பெற்ற கடைக்காரர்.

## லஞ்சப் புகார்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வெளியிடப் படுகின்றனவே தவிர குறிப்பாக எவர் பெயரும் குறிப்பிட்டுச் செய்தி வெளியிடப் படாததால் வழக்குத் தொடரமுடியாமலிருக்கிறது" என்று டாக்டர் நாகநாதன் பதிலளித்தார்.


# கலீல்

லெபனுன் தேசத்துப் பெருங்கவிஞர் கலீல் ஜிப்ரான் எழுதிய குறுநாவல் ஒன்றை பிரபல எழுத்தாளர் 'உமாகாந்தன்' தமிழிலே உருவாக்கியுள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உற்சாகத்தையளிக்கும் இக்கதையைவிரைவில் 'ஈழநாடு' வாசகர்கள் சுவைத்துப் படிக்கலாம்.


வல்லை நெசவாலையிலிருந்து

# விலக்கப்பட்ட தொழிலாளருக்கு நஷ்டஈடு வழங்க தீர்ப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு,

உடுப்பிட்டி, வல்லை நெசவாலையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர் மூவருக்கும் மொத்த நஷ்ட ஈடாக ரூபா 2283 வழங்குமாறும், அவர்களை வேலையிலிருந்து நீக்கியது என்றில்லாமல், அவர்களாகவே வேலையிலிருந்து ராஜினாமாச் செய்ததாகக் கொண்டு அதற்குரிய அத்தாட்சிப் பத்திரங்களைவழங்குமாறும் தொழில் நீதிமன் [illegible] கே. துரைராஜா, கே. சுப்பிரமணியம், ஓ. சோமராஜா ஆகிய மூன்று தொழிலாளரும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். இவ்வேலை நீக்கத்தை ஆட்சேபித்து அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கம் தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இவ்வழக்கு விசாரணை சென்ற [illegible]-ம் திகதி நடைபெற்ற விசாரணை முடிவில் தொழில் நீதிமன்றத்தலைவர் திரு. சுப்பிரமணியம், அத்தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதாகக் கருதாமல் அவர்கள் தாங்களாகவே ராஜினாமாச் செய்ததாகக் கருதி அதற்கேற்ப அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குமாறும், துரைராஜா, சுப்பிரமணியம், சோமராஜா ஆகிய மூவருக்கும் முறையே ரூ 700, ரூ. 770, ரூ. 813 ஆக மொத்தம் ரூபா 2283 நஷ்ட ஈடாக வழங்குமாறும் தீர்ப்பளித்தார்.

தொழிலாளர்களின் சார்பில் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. இறில் ஆர். டி. சில்வாவும், திரு. காவைக் கந்தசாமியும் ஆஜராகினர். நிர்வாகத்தின் தரப்பில் வழக்கறிஞர் திரு. மு. ஆனைக் கந்தரம்ஆஜரானார்

இலங்கையில் ஈழநாடு லிமிடெட் தாபனத்தாருக்காக யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org